**2025 அக்டோபர் மாதம் 29 – ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 56/2019**

O.S. No.: 56/2019 – பரஞ்சோதி PW1 29.10.2025

த/பெ.ராசுப்பிள்ளை

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்திலுள்ள முத்திரைத்தாள் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் 3 வது பக்கத்தில் 2 வது பாராவில் நம் அனைவரின் பொதுக்குடும்ப வருமானத்தை வைத்து குடும்பத் தலைவர் என்ற பெயரில் நம்மில் 1 வது நபர் பரஞ்சோதி என்ற பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்கம் 5 ல் 1 வது நபர் பெயரில் பட்டா ஏற்பட்டும், நாம் பொதுவாக வைத்து அனுபவித்துக் கொண்டும், நாம் அனைவருக்கும் பாத்தியப்பட்டு இருந்துவருகின்ற கீழ்கண்ட சொத்தை நாம் தனித்தனியே பாகம் பிரித்து அனுபவிக்க வேண்டும் என்று, விரும்பி நானும், நம் உறவினர்களும் மற்ற பெரியோர்களை வைத்து பேசி முடித்த பிரகாரம் நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு கீழ்கண்டவாறு ஏ, பி. சி சொத்துக்களாக பிரித்துக்கொண்டோம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்கம் 6–ல் அசல் பத்திரத்தை நம்மில் 2, 3, 4 நபர்கள் வைத்துக்கொள்வது எனவும், 2 பிரதி பத்திரங்கள் தயார் செய்து, நம்மில் 1 வது நபரும், 5 வது நபரும் வைத்துக்கொள்வது எனவும் மனப்பூர்வமாக சம்மதித்து நாம் இதனை

படித்துப்பார்த்தும், படிக்கக் கேட்டும் முழு சம்மதத்துடன் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தற்போது உள்ளதுபோல் வாசித்துக்காட்டவில்லை, கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் முழுமையாக தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, லோனுக்காக போட்டுள்ளேன். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்கம் 10–ல் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளவர் எனது 2வது மனைவி என்றால் சரிதான். எனது வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ லோனுக்காக நான் சொல்வது சம்பந்தமாக என்ன வகையான ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது மகன்கள் லோன் வாங்க வேண்டும் என்று சொன்னதின் அடிப்படையில் நான் வங்கிக்கு சென்றேன், வயது மூப்பின் காரணமாக எனக்கு லோன் வங்கியில் வழங்க மறுத்துவிட்ட காரணத்தினால் எனது பிள்ளைகள் சொன்னதை கேட்டு நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். 2013ம் ஆண்டுக்கு பிறகு எனது முதல் தாரத்தின் பிள்ளைகள் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 24.10.2013ம் தேதிக்கு பிறகு பாகப்பிரிவினை பத்திரம் நடைமுறைக்கு வந்ததன் அடிப்படையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் அவரது அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான், பிள்ளைகளை நம்பி விட்டேன். 25.09.2014ம் தேதி முதல் தாரத்தின் பிள்ளைகள் அவர்களுக்குள் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 4 பிரதிவாதிகள் 25.09.2014ம் தேதி அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து

கொண்ட விபரம் மேற்படி தேதியிலேயே எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுக்குள் ஏற்படுத்திய பாகப்பிரிவினை செய்துக் கொண்டதின் அடிப்படையிலும், 2013ம் வருடம் முதல் விவசாயம் செய்து வந்ததின் அடிப்படையிலும் 2013ம் வருடம் முதல் பாகப்பிரிவினை ஆவணம் நடைமுறையில் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. 2013ம் வருடம் முதல் பாகப்பிரிவினை ஆவணம் நடைமுறையில் இருந்து வந்த காரணத்தினால் மூன்று வருடங்களுக்குள் பாகப்பிரிவினை ஆவணம் குறித்து சட்டப்படியான பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2013ம் வருடம் முதல் பாகப்பிரிவினை ஆவணத்தைப் பொறுத்து 2014ம் வருடம் பாகப்பிரிவினை ஆவணம் நடைமுறையில் இருந்து வந்த காரணத்தினால் மூன்று வருடங்களுக்குள் பாகப்பிரிவினை ஆவணம் குறித்து சட்டப்படியான பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்களுக்கு பட்டா, சிட்டா பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, எனது பெயரில் உள்ளது. வழக்கிற்காக என் பெயரில் உள்ளது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் என் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் இருந்து வருவதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது மனைவியின் வாரிசுகளின் தூண்டுதல் காரணமாக பிரதிவாதிகள் சொத்தில் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்ததாக பிரதிவாதிகள் என்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் பிரதிவாதிகள்

என்மீது பொய்யான புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2019 ம் வருடத்திற்கு பின்னிட்டு பிரதிவாதிகளின் சொத்துக்களில் தொடர்ந்து நான் அத்துமீறி நுழைந்து, சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.06.1995 ம் தேதியில் எனது 2 வது மனைவியின் பேரில் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்ததாக சொல்லப்படும் அந்த ஆவணம் நடைமுறைக்கு வராமல் இருந்து வந்த காரணத்தினால் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பொய்யான சங்கதிகள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னிட்டு 2 முதல் 4 பிரதிவாதிகளையும் எனக்கு ஆதரவாக செயல்பட வைத்து 1 ம் பிரதிவாதிக்கு எதிராக செயல்பட வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.10.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.29 18:34:44 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
29.10.2025.